

புதுக்கோட்டை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கழக முன்னோடி, க.வீரையா அவர்களின் 31 ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாதவி அரிசி ஆலையில் உள்ள நினைவிடத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ். ரகுபதி மலர் தூவி மரியாதை செய்தார். நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மு.க.ராமகிருஷ்ணன், முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் மு.கலியமூர்த்தி, க.சி.ஆசை தம்பி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# கீழடியில் மீண்டும் சிவப்பு நிற பானை கண்டெடுப்பு!

*சிவகங்கை, செப்.13-*

*கீழடியில் 10ம் கட்ட அகழாய்வில் சிவப்பு நிற பானை கண்டெடுக்கப்பட்டுள்ளது ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது. கீழடியில் பிரபாகரன், ஜவஹர், கார்த்திக் ஆகியோருக்கு சொந்தமான நிலத்தில் 10ம் கட்ட அகழாய்வு பணி நடந்து வருகிறது. ஜூன் 18ல் தொடங்கி இதுவரை 8 குழிகள் வரை தோண்டப்பட்டு பொருட்கள் கண்டெடுக்கப்பட்டது. தா என்ற தமிழி எழுத்து பானை ஓடு, மீன் உருவம் பதித்த பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.*

# மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் கவனத்திற்கு

## தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 8-9-2024 அன்று தி.மு.க. ஒருங்கிணைப்புக் குழுவினருடன் பல்வேறு கழகப்பணிகள் மற்றும் சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து கலந்தாலோசனை செய்தபோது அளித்த அறிவுறுத்தலின்படி,

கழக மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக "மினிட்" (நடவடிக்கை குறிப்பேடு) புத்தகங்களை, தலைமைக் கழகத்தில் ஒப்படைக்காதவர்கள், வருகிற 20.9.2024ஆம் தேதிக்குள் தலைமைக் கழகத்தில் ஒப்படைத்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 11.9.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகம்!

## அமைச்சர் மனோ.தங்கராஜ் பேட்டி!



*வேலூர் செப். 13-*

*ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.*

*வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பால் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு துறை இயக்குனர் வினீத் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சியர் வே. இரா. சுப்புலெட்சுமி முன்னிலை வைத்தார். ஆவின் பொது மேலாளர் இளங்கோவன் வரவேற்று பேசினார். பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கலந்துகொண்டு 126பயனாளிகளுக்கு ரூ. 82 லட்சத்து 33 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றி னார்.*

*அப்போது அவர் பேசியதாவது:*

*ஒரு கிராமத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பது பால்வளத்துறை தான். பாலின் வருமானத்தை வைத்துத்தான் விவசாயிகள் சிறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும். கடந்த ஆண்டு 26 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது . இந்த ஆண்டு 38 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இத்துறையின் மூலம் கிராமங்கள் வளர்ச்சி பெறுகிறது. வேலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 90 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது . இந்த ஆண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் வழங்கும் விவசாயிகளுக்கு ஊக்கத்துறையாக ரூ.3 வழங்கப்படுகிறது. இதுவே மைல்கல் தான். தரமான பாலை வழங்கும் விவசாயிகளுக்கு கூடுதலாக ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது. ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகம் செய்ய உள்ளோம். விவசாயிகளுக்கு போனஸ் வழங்கப்பட உள்ளது. தீவனத்திற்கு மத்திய அரசு மானியத்தை நிறுத்தி உள்ளதால் தீவனத்தை கூடுதலாக புரதச்சத்தினை கூட்டி தருகிறோம் தன்னிறைவு பெறுவது தான் அரசின் குறிக்கோளாக உள்ளது. அனைவரும் ஒன்றி ணைந்து செயல்பட்டால் வாழ்க்கை தரம் உயரும் இவ்வாறு அவர் பேசினார். பின்னர் அவர் பால் உற்பத்தியாளர் களுடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல். ஏ இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம் எல்ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர்மு.பாபு, மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.*

## தி.மு.க. பவள விழா -முப்பெரும் விழா!

# மயிலாடுதுறை மாவட்டத்தில் இல்லம்தோறும் கழகக் கொடி பறக்கட்டும்!

### மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ., அறிக்கை!



*மயிலாடுதுறை,செப். 13-*

*மயிலாடுதுறை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர், நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-*

*பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறது. அத்துடன் மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள்,சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினர் அனைத்து கிளைகளிலும் உள்ள கழகக் கொடிக் கம்பங்களை புதுப்பித்தும், புதிய கொடி கம்பங்களை அமைத்தும் கழகத்தின் இலட்சிய இரு வண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும்,*

*கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டு களை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக் களுக்கு எடுத்துக் காட்டிடும் வகையில், கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும்.*

*"கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க." என்பதை நாட்டு மக்களுக்கு பறைசாற்றிடும் வகையில் கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழகக் கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு. கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்றும் கழகத்தினர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் நிவேதா எம் முருகன் எம்.எல்.ஏ., அறிக்கையில் கூறியுள்ளார்.*

# கழக முப்பெரும் விழா-
# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!



15.09.2024 பேறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா மற்றும் இல்லம் தோறும் இளைஞர் அணி, மகளிர் அணி உறுப்பினர் சேர்க்கை துவங்குதல் 17.9.2024 தந்தை பெரியார் பிறந்த நாள் அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தில் மாநகர, ஒன்றிய, நகர.பகுதி, பேரூர் பகுதிகளில் அமைந்துள்ள தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலை மற்றும் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியும், திமுக பவள விழா நிறைவை முன்னிட்டு அனைவரது இல்லங்கள், அலுவலகங்கள், வணிக வளாகங்கள், புதுபிக்கப்பட்ட கொடி கம்பங்களில் கழக கொடியேற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டும் மற்றும் செப்டம்பர் 17ல் சென்னை நந்தனம் ஒய் எம்சிஏ திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கடலூர் கிழக்கு மாவட்டத்தினர் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர மேயர், முன்னாள், இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டல குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றியகுழு உறுப்பினர்கள், மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள்(பி.எல்.ஏ), பூத் கமிட்டி உறுப்பினர்கள்(பி.எல்.சி) மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம்,**
கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.




தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சரவணன் ஏற்பாட்டில் பையர்நத்தம் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் 2026 சட்டமன்ற தேர்தல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,மாநில நிர்வாகி சத்தியமூர்த்தி, பொ.மல்லாபுரம் பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன்,ஒன்றிய நிர்வாகிகள் வே.செல்வன், பொ.இராஜேந்திரன், ஜாகிதாசெரீப், கதிரவன்,இரா.ரவி, பன்னீர்செல்வம், பூ.ராமன்,சேகர்,அரவிந்த், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# கலைஞர் நூற்றாண்டு அருங்கொடை!





முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு பெற்றுள்ளது. (03.06.1924 - 07.08.2018) இதையொட்டிப் பல்வேறு நிகழ்வுகள், வெளியீடுகள், சிறப்புகள் நடைபெற்றுள்ளன. திராவிட இயக்கம், திராவிடக் கருத்தியல், திராவிட அழகியல் முன்னோடியாகத் திகழும் கலைஞரை, இந்திய அளவில் அறிமுகப்படுத்தும் விதமாக சாகித்திய அகாதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் நூல் ஒன்றை தமிழறிஞரும் எழுத்தாளரும் கல்வியாளருமான ம. ராசேந்திரன் எழுதியுள்ளார்.

"கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தமிழை அகப்புற நவீனத்தால் வளர்த்திருக்கிறார். மரபை விதையாக்கிக்கொண்டு வெளியுலகச் சிந்தனையை எருவாக்கிக்கொண்டு தமது கொள்கைகளை கலை, இலக்கியங்கள்வழிப் பொதுமக்களிடம் பரவலாக்கிய பணியில் தமிழை அவர் அகப்புற நவீனம் ஆக்கியிருக்கிறார். அந்த வகையில் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் படைப்பாளுமை பற்றியும் பங்களிப்பு பற்றியுமான அறிமுக நூல் இது என நூலாசிரியர் கூறுவது கருதத்தக்கது.

மிகச் சிறு வயதிலேயே எழுதவும், பேசவும் தொடங்கியவர் கலைஞர். கவிதைகள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், கடிதங்கள், கட்டுரைகள், உரைகள், திரைக்கதை வசனங்கள், பாடல்கள், தன் வரலாறுகள், வாழ்க்கை வரலாறுகள், சொற்பொழிவுகள்... என இலக்கிய வகைமைகள் அனைத்திலும் இலட்சக்கணக்கான பக்கங்கள் எழுதிக் குவித்தவர். பன்னிரண்டு வயதிலேயே 'செல்வ சந்திரா' எனும் நாவலைப் படைத்தவர். சுமார் எண்பதாண்டுகள் தொடர்ந்து எழுத்தில் இயங்கியவர்.

இத்தகு ஆளுமை மிக்கக் கலைஞரை சிறு நூலில் அறிமுகப்படுத்துவது அவ்வளவு எளிதல்ல. இயக்கத்தில், இலக்கியத்தில், வாழ்க்கையில் அருகிருந்து உணர்ந்த அனுபவத்தில் கலைஞர் எனும் இலக்கியப் பேராளுமையை அற்புதமாகச் சித்திரம் போல் தீட்டி உள்ளார் நூலாசிரியர்.

கலைஞர் ஒரு படைப்பாளியாக உருவான பின்புலத்தை அவர் பிறந்த திருக்குவளை, அவரை ஈன்ற தந்தை திருமிகு. முத்துவேலர், அவரின் ஆசிரியர்கள் மகாவித்துவான் தண்டபாணி தேசிகர், டாக்டர் சி. இலக்குனார், முத்து கிருட்டிண நாட்டாரய்யா, இராஜகோபாலப்பிள்ளை உள்ளிட்ட சூழலமைவைக் குறிப்பிட்டுச் சுட்டுகிறார்.




அடுத்து கலைஞரின் இலக்கிய நோக்கை அவரின் படைப்புகளின் சாரத்தில் வழியே அறிமுகம் செய்கிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தடம் பதித்தவராக கலைஞரைப் பதிவு செய்கிறார். "கலை இலக்கியங்கள் எல்லாம் மக்களுக்கானவை. அவர்களின் பொழுது போக்குக்காக இல்லை: அவர்களின் முன்னேற்றத்துக்கானவை என்பதில் அவரது படைப்புகள் உறுதியாக இருக்கின்றன.

சமுதாயத்திலிருந்து பெற்ற பாடங்களைக் தெளிவாக உணர்த்து சமுதாயத்திற்குப் பயன்படும்படியாகத் தன்னைக் கலந்து திருப்பி அளிக்கும் படைப்பாளியாக கலைஞர் கருணாநிதி அவர்கள் திகழ்கிறார் என மிகச் சரியாக மதிப்பீடு செய்கிறார்.

மேலும் "அவரது படைப்புகளின் அடிப்படை பெரும்பாலும் சமுதாயச் சிந்தனையாக இருக்கிறது. சமுதாய நிலையிலும் பொருளாதார அடிப்படையிலும் எடுத்துக்காட்டி, சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வுகளை நிலவும் சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்துகிற வகையில் அவரது கலை, இலக்கியப் படைப்புகள் இருக்கின்றன என வரையறை செய்கிறார்.

கலைஞரின் கலை இலக்கிய நோக்கு குறித்து 'நெஞ்சுக்கு நீதி'யில் கலைஞர் எழுதுகிறார்: "கலை என்பது கனி குலுங்கிடும் பெரிய தரு. அதனைத் தனியார் தோட்டத்து மரம் போல தங்கள் சொந்தப் புகழை, பொருளைக் குவித்திடப் பயன்படுத்திக் கொள்வோரும் உண்டு. அதே கலையினைக் கால்நடையாகச் செல்வோருக்குக் கனியும் நிழலும் வழங்கும் சாலை மரமாய் பொது நலனுக்கு - புதுச் சிந்தனை வளர்ச்சிக்குப் பயன்படச் செய்வோரும் உண்டு.

ஆம். கலைஞர் பொது நலனுக்குப் பயன்படும் சாலை மரமாக நின்று காய் - கனிகளை மக்களுக்கு வழங்கினார்.

கலைஞர் மொழிப்பற்று, மொழிநேயம், இலக்கிய ஈடுபாடு, கவித்துவ மொழியாற்றல் நிரம்பப் பெற்றவர். அவரின் படைப்புகள் சமத்துவம், பெண் விடுதலை, பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துக்களை மொழிந்தன. உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டிலும் புதுமைகளைச் செய்தவர் கலைஞர்.

மக்களிடம் பரப்புரை செய்கின்ற நிலையில் எளிமையும் இனிமையும் உடையதாக அவரது மொழி நடை அமைந்தது.

இந்நூலில் அவரின் படைப்புகளின் அழகும், நுட்பமும் மிக இயல்பாகப் பதிவாகி உள்ளன. கலைஞரின் கருத்தியல் திராவிட அழகியலாக விரிவதைக் கவனப்படுத்துகிறது நூல். அதே நேரத்தில் நேரடி அரசியல் பற்றி சிறு குறிப்பும் இல்லாமல் முழுக்க இலக்கியத் தடம் பற்றி கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை ஒரு குறியீடு போல் இந்நூல் முன்வைக்கிறது.

சாதி ஏற்றத் தாழ்வுகளும் மத வேறுபாடுகளும் மக்கள் மனதிலிருந்து மாற வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்டு தமது கலை இலக்கியப் படைப்புகளைத் தந்தவர். பொது நீர்நிலைகளில், சாலைகளில், மருத்துவமனைகளில், கோயில்களில், ஆலயங்களில் நிலவும் சாதிய அடக்குமுறைகளைக் கண்டிக்கும் படைப்புகளைத் தந்தவர்.

அவ்வகையில் மூட நம்பிக்கைகளை அம்பலப்படுத்துதல், விதவை மண ஆதரவு, கலப்புமண ஆதரவு, தமிழின் விழுமிய மரபுகளைக் கொண்டாடுதல் ஆகியவை அவரது படைப்புகளில் அங்கிங்கு எனாதபடி எங்கும் விரவி இருக்கின்றன.

"நவீன கலை இலக்கியம் என்பது, கடந்தகாலக் கலை இலக்கியங்களைச் சமகாலத்து மக்களுக்கு அறிமுகப்படுத்தும் அக நவீனமாகவும் வெளிநாட்டுப் படைப்புகளைப் பார்த்தும் அவற்றின் செல்வாக்கிலும் தாக்கத்திலும் அவற்றைப் போன்றே தமது மொழியில் உருவாக்கும் புற நவீனமாகவும் அமைவதோடு தமது மண்ணின் வேரிலிருந்து வெளிப்படும் மரபின் தொடர்ச்சியாகவும் காலத்தின் தேவைக்கேற்ப வெளி உரத்தின் வளர்ச்சியில் உருவாகும் அகப்புற நவீனமாகவும் இருக்க வேண்டும் என்று கருதியவர்"

என்ற முடிவு தமிழ் நவீன இலக்கியத் தடத்தில் கலைஞரின் வகிபாகத்தை உணர்த்துகிறது. இந்திய ஒன்றியம் திராவிடத்தையும், தமிழையும் ஒருவித ஒவ்வாமைக் கண் கொண்டு பார்க்கும் வரலாற்றுத் தொடர்ச்சியில், கலைஞரின் கலை இலக்கியப் பங்களிப்பை இந்திய அளவில் நிலை நிறுத்தும் அடையாளமாக இந்நூல் விளங்குகிறது. அவ்வகையில் இது கலைஞர் அவர்களின் நூற்றாண்டு அருங்கொடையாகவும் அமைகிறது.

**இரா.காமராசு**

(கட்டுரையாளர் : பேராசிரியர், தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்)